SOURCE MATERIAL FOR MODEL I PAPER I

## மாப்ளா கிளர்ச்சி: நூற்றாண்டு காணும் மக்கள் போராட்டம்

இந்திய அளவில் 1919-ம் ஆண்டு ‘கிலாபத் இயக்கம்’ பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகத் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆங்காங்கே நிலவுடமையாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சியும் வெடித்தது. அந்த வகையில் 1920-ல் மலபாரில் அறிமுகமான கிலாபத் இயக்கத்தில் பெருவாரியான மாப்பிள்ளைமார் முஸ்லிம் பிரிவினர் பங்கேற்றனர். அந்தக் காலகட்டத்தில் இந்திய விடுதலைப் போரில் முஸ்லிம்களின் ஆதரவைத் திரட்ட காந்தியும் காங்கிரஸின் தேசியத் தலைவர்களும் கிலாபத் இயக்கத்தை ஆதரித்தனர்.

காந்தியும், மௌலானா சௌகத் அலியும் கூட்டாக சுயராஜ்யம்-கிலாபத் ஆகியவற்றை ஆதரித்து கேரளப் பகுதிகளில் பிரச்சாரமும் மேற்கொண்டனர். அதற்குப் பெரும் வரவேற்பும் கிடைத்தது. அதன் மூலம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஒத்துழையாமை இயக்கத்தில் இஸ்லாமியர்கள் பெருவாரியாகப் பங்கேற்றனர்.

**ஆயுதம் தாங்கிய கலகம்**

அனைத்துப் பகுதி இந்தியர்களையும் ஒரு கொடியின் கீழ் அணிதிரட்டுவதில் முதன்முதலாக வெற்றி கண்ட இயக்கம் இது என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

1921-ம் ஆண்டு, இன்றைய கேரளத்தின் மலபார், நிலம்பூர் பகுதிகள் அன்றைய மதராஸ் மாகாணத்துக்கு உட்பட்டவையாக இருந்தன. இப்பகுதியின் பெரும்பான்மை விவசாயிகள் ‘மாப்பிள்ளைமார் முஸ்லிம்’ பிரிவை சேர்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் சொந்தமாக நிலமில்லாதவர்கள், நிலச்சுவான்தார்களிடம் அடிமைகள்போல் வேலை பார்த்தவர்கள். மேற்கண்ட போரட்டத்தின் ஒருபகுதியாக மலபார் ஜில்லாவை சேர்ந்த மாப்பிள்ளைமார் முஸ்லிம்கள் கிளர்ச்சி செய்து போராடினார்கள். இதுவே ‘மாப்ளா கிளர்ச்சி’ எனப்படுகிறது.

அது ஆயுதம் தாங்கிய கலகமாக வெடித்தது. காவல் நிலையங்கள் கைப்பற்றப்பட்டன. நீதிமன்றம், பதிவுத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன. லட்சக்கணக்கானோர் பங்கேற்ற இந்த எழுச்சி இயக்கத்தின் பலனாக 1921 ஆகஸ்ட் முதல் அந்த ஆண்டு இறுதிவரை மலபார் பகுதி கலகக்காரர்கள் வசம் வந்தது. பிரிட்டிஷ் ராணுவம் பின்வாங்கும் நிலை ஏற்பட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போனதும், பிரிட்டிஷாரின் கூடுதல் ராணுவம் மட்டுமல்லாது, கூர்க்கா ரெஜிமெண்ட் படையும் இப்பகுதிக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் கலகத்தை அடக்குவதற்கெனவே மலபார் ஸ்பெஷல் போலீஸ் (MSP) உருவாக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது. இந்த கலகச் சூழலில் சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிறையில் அடைக்கப்பட்டனர். மூன்றாயிரம் பேர் நாடு கடத்தப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டனர். 10 ஆயிரம் பேருக்கு மேல் காணாமல் ஆக்கப்பட்டனர்.

**வேகன் சோகம்**

இந்த சூழ்நிலையில்தான் 1921 நபம்பர் 19-ம் தேதி 122 பேரை ரயில்வே சரக்குப் பெட்டி ஒன்றில் ஆடுமாடுகளைப் போல் அடைத்து கோவை சிறைக்கு ஆங்கிலேய அதிகாரிகள் அனுப்பினார்கள். காற்றும் வெளிச்சமும் புகாத வண்ணம் கதவு மூடப்பட்டு, மந்தை மந்தையாக மனிதர்கள் குவிக்கப்பட்டதால், கேரள மாநிலம் திரூர் ரயில் நிலையத்திலிருந்து கோவை போத்தனூர் ரயில்நிலையம் வந்துசேர்வதற்குள் (144 கிலோ மீட்டர் தொலைவு) 70 பேர் சடலமாகிக் கிடந்தனர்.

இந்த சம்பவத்தை 'வேகன் சோகம்' (The Wagon Tragedy) என்று கேரள அரசாங்கம் நினைவு கூர்கிறது. அதையே வரலாற்று ஆய்வாளர்கள் 'வேகன் படுகொலை' (The Wagon Massacre) எனக் குறிப்பிடுகிறார்கள். அந்தத் தியாகத்தின் குறியீடாக திரூர் நகராட்சி வேகனைப் போன்ற கலையரங்க முகப்பை உருவாக்கி நினைவுச்சின்னமாக்கி இருக்கிறது. அந்த வேகன் கட்டிடத்தில் MSM LV 1711 என்ற எண்ணும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வேகன் வடிவமைப்புக்குச் சில அடி தொலைவிலேயே கலையரங்கச் சுவரில் அந்த வேகனில் உயிர்நீத்த 70 பேரின் பெயர்களும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

1857-ல் சிப்பாய் கலகம் வெடித்ததற்குப் பிறகு (முதல் இந்திய சுதந்திரப் போராக வரலாறு பதிவு செய்துள்ளது) ஒரு சம்பவத்தில் இத்தனை பேர் இறந்தது இதில்தான். இக்கலகத்தில் மாப்பிள்ளைமார் முஸ்லீம் மட்டுமல்லாது, இந்துக்களும் கலந்து கொண்டுள்ளனர். இந்தப் போராட்டத்தில் பங்குபெற்றதற்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு தூக்குத் தண்டனை பெற்ற முதல் 46 பேரில் 3 இந்துக்களும் அடங்குவார்கள்.

மாப்பிள்ளைமார் கலவரத்தை மையப்படுத்தி 'சுந்தரிகளும் சுந்தரன்மாரும்' என்கிற மலையாள நாவலை எழுத்தாளர் உரூப் எழுதியிருக்கிறார். மாப்பிள்ளையார் கலவரத்தில் வரும் காதர் கதாபாத்திரத்தை ஏற்று '1921' என்கிற மாயாளப் படமொன்றில் 1988-ல் நடிகர் மம்மூட்டி நடித்துள்ளார். ஐவி சசியின் இயக்கத்தில் வெளியான அந்த மாயாளத் திரைப்படம் கேரள அரசின் சிறந்த திரைப்படத்திற்கான விருதையும் பெற்றது. தமிழ் இலக்கிய ஆளுமைகளில் ஒருவரான சுந்தர ராமசாமியின் 'புளியமரத்தின் கதை' நாவலில்கூட ஒரு அத்தியாயத்தில் மாப்பிள்ளைமார் கலவரம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.